Arimaa Nokku

18 : 3 அக்டோபர் 2024

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்




மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE, HISTORY, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பினைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

Scanned with CamScanner

ISSN 2320-4842

ISSN 2320-4842

அரிமா நோக்கு
18:3 அக்டோபர் 2024

ஆசிரியர்
ஈரோடு தமிழன்பன்

இணையாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாளர்
இரா. பன்னிருகைவடிவேலன்
259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096
arimaanokkuu@gmail.com
+91 91766 30415

# உள்ளடக்கம் CONTENTS

துயில் நாவலில் மெய்ப்பாடு உணர்வுகள் - ரா. சத்தியசீலா 05
மணிமேகலையில் வாழ்வியல் கூறுகள்- முனைவர் ஏ.ஜான்சி மேரி 11
கவிஞர் மனுஷ்ய புத்திரன் கவிதைகளில் இயற்கைச் சூழலும்
மனித வாழ்வியலும் - திரு. இரா. ஆதிகேசவன் 16
தனித்தமிழ் இயக்க இதழியல் வரலாறு:
பெண் இதழாளர்கள் - முனைவர் ஜெ. மதிவேந்தன் 23
பழங்காலத் தமிழர்களின் விளையாட்டுக்கள் - திருமதி க. மாலதி 29
மருதத் திணையில் உழவும் உணவும் - நா. வடிவுக்கரசி 33
எட்டுத்தொகையில் அக இலக்கியங்கள் காட்டும் தமிழர் பண்பாடு
முனைவர் கே. சி. ஆர். ஷிஜி 38
புறநானூற்றில் பெண் மறம் - திருமதி. மு. நாகலட்சுமி 42
சமகால சிறுகதைகள் சித்தரிக்கும் நவீனத் தமிழ்ச் சமூகம்
ம. பரிமளா தேவி 47
சிற்பியின் கவிதைகளில் அறிவியல் பார்வைலூ. சவரியம்மாள் 51
Political communication on Triangular anthology: An impact
of BBC Documentary in India - Gowtham Raja Sathish 57
Artificial Intelligence in Administration: Enhancing Efficiency,
Transparency, and Citizen Engagement - Dr. K. Premavathi 62
ஃப்ராய்டிய கோட்பாட்டின் வழிச் சங்க இலக்கியக் கனவோடை
வே. செவ்வந்தி 64
"From Traditional Festivals to Modern Gatherings: The Evolution
of Events as Platforms for Business Promotion"
Dr. Sivachander. G 68
பூமணியின் சிறுகதைகள் உணர்த்தும் கரிசல் நிலச்சமுதாயம்
திரு. நா. முருகன் 73
பெருமாள்முருகன் சிறுகதைகளில் பண்பாட்டுக் கூறுகள்
மு. பொன்னி -முனைவர் மு. தமீம் மன்சூர் 77
அவலநிலையை முன் வைத்து - தூப்புக்காரி நாவல்
பெ. சிவசக்தி - முனைவர் வி. கலாவதி 81
எழுத்து சி சு செல்லப்பாவின் படைப்பியல் -முனைவர் த. முத்துலட்சுமி 83
சங்க இலக்கியங்களில் குரவைக்கூத்து -முனைவர் ஏ. மேரி நேசபிரியம் 87
மனிதன் வாழ்க்கையில் திருவள்ளுவர் காட்டும் மருட்கை (மயக்கம்)
ச.பாலசரஸ்வதி 91
பாரதியின் அறிவியல் பார்வை -முனைவர் மு. கோவிந்தராஜூலு 93
ஈழக்கவிதைகள் - ஒரு பார்வை
ஜோ. இளங்கோவன் - வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர் 95
தாலாட்டுப் பாடல்களில் உளவியல் - கி. சுப்பிரமணி 98
கரன் கார்க்கியின் கறுப்பு விதைகள் நாவலின் சமுதாயம்
சா. பிரியா 101
சங்க இலக்கியத்தில் அறக்கருத்துக்கள் - முனைவர் பா. அருள்ஜோதி 105
எஸ். அர்ஷியாவின் பார்வையில் பெண்கள்
க. சரவணன் - முனைவர் த. பரமேஸ்வரி 111
பெருங்கதையில் நரவாணக் காண்டத்தில் நகை
அ. சக்திவேல் - முனைவர் த. பாலமுருகன் 115
இனியவை நாற்பது புலப்படுத்தும் தன்னுணர்வு (Feeling of self)
திரு. சி. குமரகணேஷ் 118
இரா.பிரேமாவின் சிறுகதைகளில் பெண்ணியம்
திருமதி அ.மகேஸ்வரி - முனைவர் த. கீதாஞ்சலி 121
திருத்தொண்டத்தொகை காட்டும் பக்தியுணர்வு
பா. தன்ராஜ் - முனைவர் எ. கற்பகம் 125
இனக்குழுச் சமுதாய வாழ்க்கையில் குறுநில மன்னர்கள்
முனைவர் க. இராஜா 129
அவல வீரன் - கோவலன் - முனைவர் த. ராதிகா லட்சுமி 132
கூகி வா தியாங்கோவும் தமிழறிஞர் அயோத்திதாசப்பண்டிதரும்
முனைவர் ந இரகுதேவன் 136
பெண்களின் ஆளுமை - முனைவர் து. விசாலாட்சி 143
சங்க இலக்கியத்தில் புறத்திணை வாழ்வியல்கள்
முனைவர் இரா.அன்சல்யா 147
சங்க இலக்கியத்தில் அவரை - முனைவர் செ. இளையராஜா 151
வாழ்வியல் கோட்பாட்டில் உண்ணா நோன்பு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் செ. மகேஸ்வரி 156
பெண்ணியப்பார்வையில் தமிழ் நாவல் இலக்கியங்கள் - ஓர் ஆய்வு
திரு. இல.பூவலிங்கம் - முனைவர் மா.ஜெயச்சந்திரன் 160
தமிழச்சி தங்கபாண்டியனின் வனப்பேச்சிக் காட்டும் நடப்பு நிகழ்வுகள்
கு. நளினி 164



Scanned with CamScanner

ISSN 2320-4842

# இரா.பிரேமாவின் சிறுகதைகளில் பெண்ணியம்

**திருமதி அ.மகேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

**முனைவர் த. கிதாஞ்சலி**
நெறியாளர், உதவிப்பேராசிரியர், நல்லமுத்துக்கவுண்டர்
மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

இருபதாம் நூற்றாண்டில் தற்கால தமிழ் இலக்கிய வகைகளில் தனக்கென தனி இடத்தை பெற்று சிறந்த இலக்கிய படைப்பாக திகழ்வது சிறுகதை இலக்கியமே. மக்களின் பொழுதுபோக்கிற்காக தொடங்கப்பட்ட சிறுகதைகள் நாளடைவில் சமுதாயத்தின் அவல நிலைகளையும் வாழ்க்கை போராட்டங்களையும் காட்டும் கண்ணாடியாக மாறின.

சிறுகதை வளர்ந்து வரும் இன்றைய சூழலில், சிறுகதை படைக்கும் படைப்பாளிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டே வருகின்றன. 'பெண் மைய கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்பு முனைவர் இரா.பிரேமா அவர்களால் தொகுக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வெளிவந்தது. இத்தொகுப்பில் 25 எழுத்தாளர்கள் எழுதிய பெண்ணிய சிந்தனை நிறைந்த 25 சிறுகதைகள் அமைந்துள்ளன. மேலும் 'எங்களோட கதை' என்ற தலைப்பில் முனைவர் இ.ரா. பிரேமா அவர்களால் பெண்ணிய நோக்கில் எழுதப்பட்ட 10 கதைகள் இந்த தொகுப்பில் உள்ளன. இவற்றில் 'எங்களோட கதை' எனும் தொகுப்பு பல பெண்களின் கூட்டுக் குரலாக ஒலிக்கிறது.

## பெண்ணியத்தின் தோற்றம்

Feminism என்ற ஆங்கில சொல் கி.பி 19ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது. 18ஆம் நூற்றாண்டிலேயே ஆங்காங்கு பெண் விடுதலைச் சிந்தனை எழுச்சி பெற்றிருந்தது என்றாலும், பெண்ணியம் தனி ஒரு கோட்பாடாகவே வலுப்பெற்றது. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தான் இக்கோட்பாடின் தோற்றம் பற்றி இரு வேறு கருத்துக்கள் நிலவி வந்தன.

முதலாளித்துவத்திற்கு எதிராக எழுந்த மார்க்சிய வர்க்கப் போராட்டதால், ஆதிக்க வெறி கொண்டவர்களை எதிர்க்கும் நோக்கில் அதன் ஒரு பகுதியாக ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவும், பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகவும் குரல் எழுப்பப்பட்டது. இதுதான், பெண்ணியத்தின் வேர்என்றும், இதிலிருந்துதான் தனி ஒரு கோட்பாடு உருவாக்கப்பட்டது என்றும் மார்க்சியத்தின் பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். ஆனால் Pure Feminism என்று சொல்லக்கூடிய தூய பெண்ணியவாதிகள் இக்கருத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இவர்கள் பெண்ணியம் என்பது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாடுகளில் பகுத்தறிவின் அடிப்படையில் ஆண்களுக்குச் சமமான உரிமைகள் வேண்டிப் பெண்கள் எழுப்பிய குரலில் தோற்றம் பெற்றது என்று கூறுகின்றனர்.

## பெண்ணியம்-சொற்பொருள் விளக்கம்

ஆங்கிலத்தில் 'Feminism' என்ற சொல் பெண்கள் பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானமாகும். Feminism என்பது Femina என்ற இலத்தின் மொழிச் சொல்லின் திரிபு. இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் படைப்புக்களைக் குறிக்கவே பயன்பட்டு வந்தது. "பெண்களின் பின்பே பெண்களின் உரிமையைப் பேசுவதற்காகக் குறிக்கப்பட்டது.



Scanned with CamScanner

ISSN 2320-4842

தாழ்நிலையை ஆராய்ந்து, அதை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளைப் பெண்ணியம்" (காலந்தோறும் பெண்கள், ப.25) என்று இதற்கு வரையறைகளைக் கொடுத்திருக்கிறார். கார்ட்டன் என்பவர் பெண் என்றாலே அவள் தாயின் கருவறையிலிருந்து கல்லறை செல்லும் வரை பிறர் சுமைகள் மற்றும் எண்ணற்ற பிரச்சனைகளையும் சந்திப்பவளாகவே இருப்பது நடைமுறை வழக்காகவுள்ளது. பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளைச் சிறுகதைகளின் வாயிலாகக் காண்பதும், அப்பிரச்சனைகளுக்கான தீர்வுகளையும் காண விழைவதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்கல்வி

ஓர் ஆண் மகனுக்குக் கற்பித்தால் ஒருவனுக்கு மட்டுமே கற்பிப்பதாகும். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கற்பித்தால் அவள் தொட்டு வழிவழியாக அக்குடும்பத்திற்கே கற்பித்ததற்கு ஒப்பாகும் என்பது எல்லாரும் அறிந்ததே. **பெண்ணுக்குத் தனித்தியங்கும் ஆற்றலையும், தனித்தன்மைகளையும் தருவதில் முன் நிற்பவை கல்வியும் பொருளாதாரமும் எனலாம்** (நாவல் வளம், ப.291) என்கிறார் தண்டாயுதம். ஆனால் சில பெற்றோர் பெண்களுக்குக் கணவன்தான் பாதுகாப்பு என்று உரிய வயதில் திருமணம் முடிப்பதைக் கடமையாக எண்ணி கல்விக்குத் தடை செய்கின்றனர். திலகவதியின் போன்சாய் பெண்கள் எனும் கதையில் தன் மகளுக்குக் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் திருமணத்தை நடத்த முற்படுகின்றான் முகுந்தன். அவனுடைய மனைவி மேற்கொண்டு மகளைப் படிக்க வைக்க வேண்டும் என்கிறாள். இதனை ஏற்காத முகுந்தன், வழக்கறிஞரான சகுந்தலா மூலம் மனம் மாறுகிறான். திருமண வாழ்வில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள், இழப்புகள் என ஏராளமான வழக்குகள் தினமும் நீதி மன்றத்திற்கு வருவதைக் கண்டு, "வானளாவி வளரக் கூடிய ஆழமரத்தின் ஆணிவேரை நறுக்கி, அதை போன்சாய் மரமாக மாற்றி அலங்காரப் பொருளாக்கி, வனங்களிலும், மலைகளிலும், வறட்சியான காலத்திலும் ஆழமான வேர்பரப்பி நீர் உறியும் பெருமரங்களை, வளமான காலத்திலும் கூட குறுக்கி நறுக்கி அதன் வளர்ச்சியை நிறுத்தி அதன் போஷணைக்கு அது தன்னை வளர்ப்பவனையே சார்ந்திருக்கச் செய்வது போலத்தான் மகாலட்சுமியையும் ஆக்கி விடப் போகிறோமோ" (திலகவதி கதைகள், ப.345) என்று அச்சம் கொண்டு மகளை மீண்டும் கல்லூரியில் சேர்க்க முடிவெடுக்கின்றான் முகுந்தன். திருமணம் என்ற சடங்கிற்காக பெண்ணின் கல்விக்குத் தடைவிதித்து அவளின் வளர்ச்சியை முடக்குவதை இக்கதை எடுத்துக்காட்டியுள்ளது.

## பணி மகளிர் சிக்கல்கள்

நவீன வாழ்க்கையில் தேவைகள் பெருகிக் கொண்டே போகின்றன. தொழில்நுட்பம் எந்த நூற்றாண்டையும் விட துரித வளர்ச்சியைப் பெற்று வருகிறது. இந்த வேகத்துக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் மனித உழைப்பும் தேவையாக இருக்கிறது. ஆகவே ஆண் பெண் என்கின்ற பேதம் இன்றி அனைவரும் ஏதோ ஒரு பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாக இருக்கிறது. இந்நிலையில் குடும்பத்தை நன்முறையில் பேணுவது என்பது பெரு சவாலாகி வருகிறது.

பாலியல் வன்முறைக்கு வயது வந்த பெண்கள் பாதிக்கப்பட்ட நிலை மாறி, இன்று பெண் குழந்தைகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை விளக்கும் விதமாக கள்ளிப்பாதையும் நுணாப்பூவும் என்னும் கதையை ஆசிரியர் படைத்துள்ளார்.

உமா அலுவலகத்தில் வேலை பார்ப்பவள். அவளின் கணவன் முகுந்து துபாயில் பணியாற்றுபவர். அதனால் மகள் ரீத்துவைக் கவனிக்கும் முழு பொறுப்பும் உமாவிடமே இருந்தது. உமா அலுவலகத்தில் அலுவலகத்தில் நடக்கவிருக்கும் கூட்டத்திற்குச் செல்கிறாள். மாலை வீட்டிற்குத் திரும்பிவர காலத் தாமதமாகும் என்பதனால் தன் மகள் ரீத்துவைப் பக்கத்து வீட்டு மணியக்கா வீட்டில் இருக்கச் சொல்கிறாள். கூட்டம் முடிந்து உமா தன் மகளை அழைப்பதற்காக பக்கத்து வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு மணி அக்கா வீட்டில் இல்லை. இவள் மகள் ஏதோ ஒரு பயத்தில் இருப்பதைக்



Scanned with CamScanner

ISSN 2320-4842

...அதிர்ச்சி அடைகிறாள். சிறிது நேரத்தில் மணி அக்கா வருகிறாள். தான் வெளியில் சென்ற காரணத்தால் சிறிது நேரம் தன் மகன் தீபக் இடம் ரிதுவை விட்டு சென்றதாகக் கூறுகிறாள்.

அம்மா... அம்மா... என்று தேம்புகிறாள். , ரீத்து... சொல்லுமா, என்ற போது அம்மாவிடம் "அம்மா... அம்மா.... அந்த தீபக் அண்ணா.... இல்ல அவன் அண்ணா இல்ல, அவன் என்னை வேறு மாதிரி பார்த்தா ன் அம்மா.... என் மீது இங்கே அங்கே கை வைத்தான் அம்மா. என்னவோ செஞ்சான் அம்மா.... எனக்கு பிடிக்கவே இல்லை.... (ராபிரேமா, கள்ளிப்பாதையும் நுணாப்பூவு ம. ப-9 ) என்று கூறி அழுகிறாள்.

உமா விக்கித்து நின்றாள். கண்ணில் இருந்து அவளையும் அறியாமல் கண்ணீர் வந்தது. தன் முன் நிற்கும் இச் சவாலை எதிர் கொள்ள துணிய வேண்டும் என்ற மன உறுதி அவளுக்குப் பிரவாகமாக பெருகியது. சிறுவயதிலேயே ஆணினத்தைக் கண்டு பிறழும் மனநிலைக்கு ஆளாவதை இக்கதையின் மூலம் சுட்டிக்காட்டுகிறார் ஆசிரியர்.

## திருமணச் சிக்கல்கள்

தன் தாயின் உடல்நலக்குறைவால் தன் காதலை இழக்கும் ஒருபெண்ணின் நிலையை பரிதவிப்பு எனும் கதை எடுத்துக் காட்டுகிறது." பிள்ளைகள்வெளியே உலகிற்கு வர பிரசவ வழியை தாங்குகிறாள் தாய். பால் குடிக்க தாய் பத்தியம் காக்கிறாள். தாயின் கருவறையில் பத்து மாதம் வாழ்ந்து வெளியே பிறந்து வாழும் ஒவ்வொருவரும் அத்தாயை காத்தல் கடன், நம்மை காத்த தெய்வமாம். பெற்றோரை நாம் காத்தல் வேண்டும்" (பெண் இன்று- நேற்று- அன்று, ப-66) என்று தாயம்மாள் அற வாணன் கூறுகிறார்.

'மருத்துவ பரிசோதனை ரிப்போர்ட்டை பார்த்து அதிர்ந்து போனாள் சுருதி. தாயின் இரண்டு சிறுநீரகமும் செயலிழந்து இருப்பதை எண்ணி வருந்தினாள். பொறியியல் படிக்கும் தன் தம்பியிடம் கூறவும் உதவி கேட்கவும் அவள் விரும்பவில்லை. தன் வருங்கால கணவனாக வரப்போகும் குருவிடம் கூறினாள்

சிறுநீரகம் கிடைப்பது அவ்வளவு எளிதாக தெரியவில்லை. இறுதியில் தன்னுடைய சிறுநீரகமே தாய்க்குப் பொருந்துவது எண்ணி தீர்வு காட்டிய கடவுளுக்கு நன்றி சொல் கிறாள். குரு இந்த முடிவினால் தங்களுடைய வருங்கால திருமண வாழ்வு தடைபடும் என்று கூறுகிறான். சுருதி குருவிடம் "நீங்க என் ஆயிளுக்கும் துணை வருவீங்கன்னு நினைத்தேன் பரவாயில்லை. சரியான நேரத் தில் உங்களை புரிந்து கொள்ள கடவுள் எனக்கு வாய்ப்பு கொடுத்து இருக்கிறார்" எனக்கூறி அந்த இடத்தை விட்டு சென்று விடுகிறாள்.

சுருதி அம்மாவின் அறுவை சிகிச்சைக்குப் பிறகு தானும் இரண்டு மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்கிறாள். மீண்டும் வேலைக்கு செல்லும்போது, குருவை சந்திக்க நேரிடுகிறது. குரு தன் பெற்றோரிடம் திருமணத்திறகுப் போராடி அனுமதி வாங்கியதாக கூறுகிறான். "குரு தயவு செய்து நீங்க இங்கு இருந்து போகலாம். எனக்கு இப்ப கல்யாணம் செய்து கொள்கிற மூடு இல்லை. அதுவும் உங்களை கல்யாணம் செய்து கொண்டு வாழ்வதற்கு எனக்கு இஷ்டம் இல்லை. கல்யாணம் இல்லாத வாழ்க்கையே சுகமாக இருக்கும் என்று நினைக்கிறேன் என இரு கைகளையும் கூப்பி தலையசைத்தாள், 'மனிதாபிமானத்தை தொலைத்த பின்பு உறவு எதற்கு? நட்பு எதற்கு? (பரிதவிப்பு, ப -22) குரு செய்வது அறியாது விக்கித்து நின்றான். உடைந்த பானையை ஒட்ட வைக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தான். அப்பா இல்லாத தன்னையும் தன் தம்பியை யும் கண்ணின் மணிபோல காத்த தாய்க்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தாள் சுருதி.

பெற்ற தாயை விட சிறந்த கோயில் இல்லை என்பார், ஆனால் நடைமுறையில் தெய்வ மாக போற்ற வேண்டிய தாயை உயிரற்ற கற்சிலையாகி விடுகின்றனர். சமுதாயத்தில் உள்ள பெரும்பாலான ஆண்கள் இறுதிக் காலத்தில் பெற்றோர்களைக் காப்பாற்றுவதி ல்லை. பெண்கள் தான் காப்பாற்றுகின் றார்கள் என்பதை ஆசிரியர் இக்கதையில்



Scanned with CamScanner

ISSN 2320-4842

சுட்டிக்காட்டி உள்ளார்.

**சமையலறையில் முடங்கிபோதல்**

பெண்கள் வாழ்வில் சமையலறை பெரும் இடம் குறித்து ஆர்.சூடாமணி, அம்பை, திலகவதி, வாஸந்தி, தமயந்தி ஆகிய பெண் எழுத்தாளர்களால் சிறுகதைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இதில் அம்பையின் ‘வெளிப்பாடு’, ‘ஒரு வீட்டின் மூலையில் சமையலறை’ ஆகிய சிறுகதைகள் ‘சமைய லறை’ என்னும் தளத்தையே அடிப்படை யாகக் கொண்டு கதைகள் அமைந்துள்ளன. ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ கதையில் கூட்டுக்குடும்ப வாழ்வில் பெண் கள் சமையலறையில் முடங்கிக் கிடக்கும் நிலையை இக்கதை விளக்குகின்றது. பெண்கள் சமையலறையில் ஆதிக்கம் செலுத்துவதையே பெருமையாகக் கருதுகின்ற னர். கூட்டுக்குடும்ப வாழ்வில் பெண்களின் அதிகாரம் சமையலறையில் நிலவுவதாக கருதும் பெண்களின் அறியாமை நிலை, தலைமுறை தலைமுறையாக அடிமைப் படுத்தப்படும் பெண்கள் நிலை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

‘சமையலறை என்ற பௌதிக விவரம் அவர் களைப் பாதிக்கவில்லை. அப்படிப்பட்ட ஒன்று இல்லாதது போல் இருந்தார்கள், அவர்கள் கூட்டுக் குடும்ப வீடுகளில் பரந்த கல்தரை முற்றம், கூடம் இவற்றைத் தாண்டிய இருள் மூலை சமையலறை. பூஜ்யமாய் விளக்கு எரியும் அங்கு. முக்காடு அணிந்து, அழுத்தமான வண்ணப் பாவாடைகள் இருளை ஒட்டியே இருக்க, பெண்கள் நிழல்களாய்த் தெரிவார்கள் அந்த அறையில். அறைந்து சப்பாத்தி மாவு பிசைந்து கொண்டோ. அடுப்படியில் கும்மென்று மணக்கும் மஸாலா பருப்பைக் கிளறியவாறே.’ ஏன்று பெண்கள் வாழ்வு சமையலறையைச் சார்ந்து அமைவதாக விளக்கப்பட்டுள்ளது.

மேலும், “சமையலறையை ஆக்கிரமித்துக் கொள், அலங்காரம் செய்து கொள்ள மறக்காதே, இரண்டும் தான் உன் பலம். அதிலிருந்து தான் அதிகாரம’; என்று அடுத்த தலைமுறையினருக்கு வலியுறுத்துகின்றனர். இதில் பெண்களின் சமையலறை வாழ்வை யும், சமையலறையையே தன் அதிகாரமாக கருதும் பெண்களின், அறியாமையையும் அம்பை படம் பிடித்துக்காட்டியுள்ளார் மேலும் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு இருந்த நிலையையும், சமையலறையையே உலகமாகக் கருதியதால் சாதிக்க முடியாமல் போய் விட்ட நிலையையும் சுட்டிக் காட்டியுள்ளார் அம்பை.

மட்டன், புலவு, மஸாலா, பூரி, ஆலு, தனியாப் பொடி, உப்பு, சர்க்கரை, பால், எண்ணெய், நெய் என்று யோசித்திருக்கா விட்டால், “ஒரு வேளை நீங்கள் ஆப்பிள் விழுவதைப் பார்த்திருக்கலாம். தண்ணீர் கெட்டிலின் மூக்கு நுனி ஆவியைப் பார்த் திருக்கலாம். கைலாச பர்வத்தில் அமர்ந்து காவியம் எழுதியிருக்கலாம் குகைகளுக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம. போர்கள், சிறை கள், தூக்கு மரங்கள், ரஸாயன யுத்தங்கள் இல்லாத உலகத்தை உண்டாகியிருக்கலாம்.” என்று அம்பை பெண்கள் சமையலறையி லிருந்து விடுபட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

வீட்டின் மூலையில் ஒரு சமையலறை கதையில் சமையலறை வாழ்வோடு பெண் களுக்கு மனித வாழ்வின் அவசியத்தையும், பெண்களின் அறியாமை உணர்வினையும் அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதையும் அம்பை விளக்கியுள்ளார்

பெண்விடுதலை என்பது பன்முகத்தன்மை வாய்நதது. வாழ்கையும் உணர்வகளும் மனிதர்களுக்கிடையே வேறுபட்டு இருப்ப தால் ஒரே விதமான பெண்ணியத்தைப் பேச முடியாது. பெண்களின் வாழ்க்கை வர்க்கத்தி ற்கு வர்க்கம் மாறுபட்டிருப்பதால் பன்முகத் தன்மை வாய்ந்த பெண்ணியத்தையே இக் கதைகள் வலியுறுத்துகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. இரா.பிரேமா, பெண்ணிய கதைகள், காவ்யா பதிப்பகம், சென்னை. மு.ப.2004
2. தாயம்மாள் அறவாணன், பெண் இன்று- நேற்று- அன்று, தமிழ்க்கோட்டம், 1987
3. ராஜம்கிருஷ்ணன், காலந்தோறும் பெண், தாகம் பதிப்பகம், 2002



Scanned with CamScanner